# 52. மயிலமலை.

*வெண்டளையான் வந்த தரவுகொச்சகக்கலிப்பா.*

*பண் - பஞ்சமம்.*

**சீ**ரார் தெருளாக்கச் சேவடியே சேர்வேனென்
றூரார் மனைவிமகா ருற்றாரெல் லாமகன்றேன்
நாரார் மனத்திடைநீ நல்லன்பு வையாயேல்
வாராதோ கண்ணீர் மயிலமலை வாழ்குகனே. 1

**ந**ன்றுகறை யெண்ணா நிடூதனர்போ னாளுமுயிர்
கொன்றுபுசித் தோருமிழி கொங்குகுடித் தோருமென்றும்
பொன்றுதலி லாவுனைச்சூழ் புண்ணியத்தி னுய்ந்தார்நான்
மன்றுபட்டு மெய்த்தேன் மயிலமலை வாழ்குகனே. 2

---

***2. கொங்கு*** = *கள் ;* ***பி - நிகண்டு*** *காண்க.*

**க**ட்டுரையில் லாதாருங் காமிகளுங் கள்வருநற்
சிட்டரென வானாருன் சேவடிபா வித்தளவில்
நெட்டுலகி னின்னடியே நெஞ்சிருத்தி யுன்னொருநான்
மட்டுமலை கின்றேன் மயிலமலை வாழ்குகனே. 3

**ந**ல்காவன் னெஞ்சருநன் ஞாயம் பிறழ்ந்தவரும்
செல்கால மெய்துமுனுன் சேவடிசிந் தித்துய்ந்தார்
பல்காலு நின்னடியைப் பாடுமெனக் குன்னருடான்
மல்காத தென்னே மயிலமலை வாழ்குகனே. 4

**ஆ**ராய வொண்ணா வதிபாவ மேபுரிந்த
நீராரு நின்னுருவை நெஞ்சிருத்தி யுய்ந்தார்கள்
தாராள மாவுனிரு தாடுதிக்கு மெற்குனருள்
வாராத தென்னே மயிலமலை வாழ்குகனே. 5

**பா**ழ்வேட நம்பிப் பதிதரென நின்றோரும்
சூழ்வேக முள்ளோருந் தோத்திரித்து வாழ்ந்ததுண்டு
தாழ்வேது மில்லாவுன் றன்னைநனி கூடினல்லால்
வாழ்வேனோ நான்றான் மயிலமலை வாழ்குகனே. 6

**கா**ட்டார்க்கு நாட்டார்க்குங் காசில் கருணையினால்
தாட்டா மரைகொடுத்தாய் தாள்பழிச்சு மென்னைவினை
ஆட்டாது பேரருளா லாட்டி யளாவவர
மாட்டாயோ மாண்பார் மயிலமலை வாழ்குகனே. 7

**வெ**ண்பாவுஞ் செம்பாவும் வித்தாரப் பொன்பாவும்
பண்பார் கரும்பாவு நின்பேரிற் பாடிடுவேன்
கண்பார்வை வந்தெனது கம்பலையைக் காதியருள்
வண்பாத வஞ்சான் மயிலமலை வாழ்குகனே. 8

**நி**ன்னைமிகப் பொச்சாந்து நீளுலகி னில்லாமல்
தென்னிளமை யிற்றானே சேரவந்த பாக்கியநீ
என்னையிது நாண்மறக்க ஞாயமிலை யெங்கணுமாய்
மன்னுமதி தாராய் மயிலமலை வாழ்குகனே. 9

**சி**ந்தைமயங் காமலெனைச் சித்தாந்த வீட்டிடைவை
கந்தமணி தெய்வமகள் காட்டார் மகள்கொழுநா
சந்தமுனி நெஞ்சத் தடங்கமல மேயமுதால்
மந்திகுதி கொள்ளு மயிலமலை வாழ்குகனே. 10

சார்வரி வருடம் ஆவணி மாதம் 29ஆம் தேதி குருவாரம்.